பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 24 சனிக்கிழமை (07-03-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 101

# இ. காங்கிரஸ் அரசு பெரும் நெருக்கடியில்!

## ஜனாதிபதி உரை மீதான வாக்கெடுப்பில் "காலை வாரி விட" எதிரணிகள் திட்டம்

புதுடில்லி, மார்ச் 7

பிரதமர் பி. வி. நரசிம்மராவின் இந்திரா காங்கிரஸ் அரசு தனது ஒன்பது மாத கால ஆட்சியின் பின் நாடாளுமன்றத்தில் பெரும் நெருக்கடி ஒன்றை எதிர்நோக்கியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றில் ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீதான வாக்கெடுப்பு நாளை மறுதினம் நடைபெறும்போது காங்கிரஸ் கட்சி அமைத்திருக்கும் சிறுபான்மை அரசின் 'காலை வாரி விட' எதிர்க்கட்சிகள் கங்கணம் கட்டியிருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

அரசின் கொள்கைகளை விளக்கி, ஜனாதிபதி நிகழ்த்திய உரைக்கு திருத்தங்கள் கொண்டு வந்து நிறைவேற்றுவதன் மூலம் நரசிம்மராவ் அரசைத் தோற்கடிக்க பிரதான எதிர்க்கட்சிகளில் ஒன்றான ஜனதா தள் கட்சி மும்முரமாக முயன்று வருகிறது.

ஜனதா தள் கட்சியின் தலைமையிலான தேசிய முன்னணியும் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்ஸீய கம்யூனிஸ்ட் கட்சி, போர்வோட் புளொக் ஆகியவை அடங்கிய இடதுசாரிக் கட்சிகள் முன்னணியும், இந்த விவகாரத்தில் சிறிய கட்சிகளின் ஆதரவைத் திரட்டுவதில் சுறுசுறுப்பாக ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி உரையில் நரசிம்மராவ் அரசு தெரிவித்துள்ள விலைவாசி உயர்வு, தாராள பொருளாதாரக் கொள்கை ஆகியவற்றுக்கு எதிரான திருத்தங்களை எந்தக் கட்சி கொண்டு வந்தாலும் அவற்றை ஆதரித்து

[5ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி மூளி



அப்ப.. காலை வாரி விடுற திலை கைகோத்து நிப்பினம் போலை...!

## பாடசாலை அபி. சபைகள் அவசரகால சட்டத்தின் கீழ்!

கொழும்பு, மார்ச் 7

பாடசாலை அபிவிருத்திச் சபைகளின் செயற்பாட்டை துரிதப்படுத்துவதற்காக, அவற்றை அவசர காலச் சட்ட விதிகளின் கீழ் கொண்டுவருவதெனத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக கல்விச் சேவைகள் அமைச்சர் சுனேத்ரா ரணசிங்கா நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

இது சம்பந்தமான சட்ட மூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் சொன்னார்.

அவர் மேலும் சொன்னதாவது;

பாடசாலை அபிவிருத்திச் சபைக்கு அப்பாடசாலையின் அதிபரே தலைவராக இருப்பார். பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர் ஆகியோர் சபையில் உறுப்பினர்களாக இருப்பார்கள். இச்சபையில் உறுப்பினர்களாக வரும் ஆசிரியர்கள், அப்பாடசாலை ஆசிரியர்களின் மத்தியில் இருந்து இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

அங்கத்துவம் கோரும் பெற்றோர்கள் கூட, பெற்றோர்

[5ஆம் பக்கம் பார்க்க]

# ஷெல் தாக்குதல்களைக் கண்டித்து அராலிப் பகுதி மக்கள் பேரணி!

யாழ்ப்பாணம், மார்ச் 7

அராலிப் பகுதியில் குடியிருப்புப் பகுதிகள் மீது தொடர்ந்து ஷெல் தாக்குதல்கள் நடத்தப்படுவதைக் கண்டித்து, அப்பகுதி மக்கள் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

பேரணியில் கலந்துகொண்ட நூற்றுக்கணக்கான மக்கள் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்துக்கும், யாழ். செயலகத்துக்கும் சென்று மகஜர்களைச் சமர்ப்பித்தனர்.

குடியிருப்புப் பகுதிகள் மீதான ஷெல் தாக்குதல்களை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்காவிட்டால் தாம் செஞ்சிலுவை அலுவலகத்திலும், செயலகத்திலும் தங்கிவிடப்போவதாக பேரணியில் வந்த மக்கள் செ. ச. சர்வதேசக்குழுப் பிரதிநிதியிடமும், அரச அதிபரிடமும் தெரிவித்தார்கள்.

அராலிப் பகுதியில் மக்கள் குடியிருப்புகள் மீது ஷெல்தாக்குதல்கள் நடத்தப்பட்டதைத் தாம் சம்பந்தப்பட்டவர்களிடம் ஏற்கனவே எடுத்துக்கூறியதாகவும், ஷெல் தாக்குதலை நிறுத்துமாறு இனியும் வற்புறுத்துவதாகவும் செ. ச. ச. குழு அதிகாரி திரு. ஜீன் பிராங்கோயிஸ் தெரிவித்தார்.

குடியிருப்புப் பகுதிகள் மீது தாக்குதல் நடத்தப்படுவது குறித்துத் தாம் ஏற்கனவே ஜனாதிபதிக்கும், கூட்டுப் படைத் தலைமையகத்துக்கும் அறிவித்திருப்பதாகவும்—

[5ஆம் பக்கம் பார்க்க]

## ஷெல் தாக்குதலை நிறுத்த அரச அதிபர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ் மாவட்டத்தில் மக்கள் குடியிருப்புக்கள் மீது மேற்கொள்ளப்படும் ஷெல் தாக்குதல்களை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்கவும்.

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் இவ்வாறு அவசர கோரிக்கை ஒன்றை ஜனாதிபதிக்கு நேற்று அனுப்பி வைத்தார்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலமாக இந்த அவசர கோரிக்கை அனுப்பப்பட்டது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகளும் குடியிருப்புகள் மீதான ஷெல் தாக்குதலை நிறுத்துவது தொடர்பாக தமது கொழும்பு அலுவலகம் மூலம் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிய வந்தது. (அ-3)

## 'லில்லி' கப்பலில் தபால் பொதிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 7

நாளை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் ''லில்லி'' கப்பலில் உணவுப் பொருள்களுடன் 294 தபால் பொதிகளும் எடுத்துவரப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. [உ-3]

## பிரசவ லீவு 111 நாட்கள்

கொழும்பு, மார்ச் 7

அரச சேவையில் உள்ள பெண் ஊழியர்களுக்கு இனிமேல் பிரசவ லீவாக 111 நாட்கள் வழங்கப்படும். சனி, ஞாயிறு, போயா மற்றும் விடுமுறை நாட்களைக் கழித்தே பிரசவ லீவுக்கான நாட்கள் கணக்கிடப்படும் என்று உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது. [உ-எ]

## தெரிவுக் குழு முடிவை பொறுத்ததாம்!

கொழும்பு, மார்ச் 7

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் அரசாங்கம் பேசுவதா, இல்லையா என்பது நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முடிவைப் பொறுத்துள்ளது.

அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வியாழன் இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

பத்திரிகையாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார். [உ-எ]

## தீவக புகையிலை கப்பலில் தெற்கிற்கு

யாழ்ப்பாணம், மார்ச் 7

தீவுப்பகுதியில் இருந்து புகையிலைச் சிப்பங்கள் கப்பல் மூலம் தென்பகுதிக்கு எடுத்துச் செல்லப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது

கடந்த வாரம் காங்கேசன் துறை துறைமுகத்தில் உணவுப் பொருள்களை இறக்கிய ''மெரிதல்'' கப்பல் மூலமே புகையிலைச் சிப்பங்கள் ஏற்றிச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-3]

## பாத யாத்திரை ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 7

இந்து சமயப் பேரவையினால் குடாநாடு முழுவதிலும் 14 நாட்கள் நடத்தப்பட இருக்கும் திருத்தலப் பாத யாத்திரை நேற்றுக் காலை 8 மணியளவில் நல்லை ஆதீனத்தில் இருந்து ஆரம்பமானது.

போர்க்காலக் கொடுமைகள், தமிழருக்கு ஏற்பட்டுள்ள துன்பங்கள், பசி, பட்டினி ஆகியவை நீங்கவும், சைவ உணர்வை ஊக்குவிக்கவும் இந்த யாத்திரை நடத்தப்படுகிறது.

பாதயாத்திரையை ஆத்மஜோதி முத்தையா ஆரம்பித்து வைத்தார். நல்லை ஆதீன முதல்வர் ஆசியுரை வழங்கினார். மற்றும் பலர் ஆரம்ப நிகழ்ச்சியின்போது உரை நிகழ்த்தினர். [உ-15]

## இன்று காங்கேசன் செல்கிறது வாகன அணி!

யாழ்ப்பாணம், மார்ச் 7

காங்கேசன் துறையில் இருந்து உணவுப் பொருள்களை எடுத்து வருவதற்கான பரீட்சார்த்த முயற்சியாக வாகன அணி இன்று காலை 8 மணிக்கு அங்கு புறப்படுகிறது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகளின் வாகனங்களுடன் 4 லொறிகள் அங்கு செல்கின்றன. [ஒ-3]

## தமிழோசை 7 நாட்களும்

பி. பி. சி. தமிழோசை நிகழ்ச்சிகள் இம்மாத இறுதியில் இருந்து வாரத்தில் ஏழு நாட்களும் ஒலிபரப்பாகும்.

எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிறு முதல் — வாரத்தில் 7 நாட்களும் — வழமையான நேரத்தில் நிகழ்ச்சிகள் இடம் பெறும். [ஒ-5]

## ஷெல் தாக்கு

பொன்னாலை, மூளாய் தெற்கு மற்றும் அராலிப் பகுதிகளை நோக்கி நேற்று முன்தினம் இரவும் ஷெல் தாக்குதல் இடம்பெற்றது. காரைநகர் முகாமிலிருந்தே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-12-28-15)

## ஈழ அகதிகள் மீது வன்முறை தாக்கு

லண்டன், மார்ச் 7

சுவிட்ஸர்லாந்தில் தஞ்சம் புகுந்திருக்கும் ஈழ அகதிகள் மீதும் இனவாத வன்முறைத் தாக்குதல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டிருப்பதாக பி. பி. ஸி. தகவல் வெளியிட்டது.

ஜேர்மனியில் தங்கியிருக்கும் வெள்ளையரல்லாதோர் மீது நாஸிகள் வன்முறைத் தாக்குதல்கள் நடத்தி வருவது தெரிந்ததே. அந்த பிரச்சினை தற்போது சுவிஸுக்கும் பரவியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [உ-3]

## தூதுக்குழு விஜயம்

மெதடிஸ்த சபையின் முன்னாள் தலைவர் வண. சோமா பெரேரா தலைமையிலான — மெதடிஸ்த திருச்சபையின் நல்லெண்ண தூதுக்குழு — எதிர்வரும் 11 ஆம் திகதிக்கும் 15 ஆம் திகதிக்கும் இடையில் இங்கு விஜயம் செய்யும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே யாழ்ப்பாணம் வந்து திரும்பிய இக் குழு கடந்த 24 ஆம் திகதி மீண்டும் இங்கு வரவிருந்தது. ஆனால் வவுனியா இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இவ் விஜயம் அப்போது ஒத்திவைக்கப்பட்டது. [உ-3]

## மக்கள் அஞ்சலி

கட்டைக்காடு மோதலில் வீரமரணமடைந்த போராளிகள் மூவரதும் புகழுடல்கள் நேற்று சாவகச்சேரி சந்தைப் பகுதியிலும் மற்றும் தென்மராட்சியின் சில இடங்களிலும், சுதுமலையிலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

பெரும் எண்ணிக்கையான மக்கள் அவ்வப் பகுதிகளில் புகழுடல்களுக்கு அஞ்சலி செலுத்தினர். [ஒ-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய Panasonic Video Cemera விற்பனைக்கு உண்டு. Model M8000 [MS1 Model மாதிரி] Complete Set இ. சிவநாதன் [மாஸ்ரர்] மூத்த விநாயகர் கோவிலடி, கரண வாய் தெற்கு, கரவெட்டி. [19952]

### தவறிவிட்டது

05-03-1992 யாழ். நாவலர் வீதிக்கும், நவாலிக்கும் இடையில் உயிலங்குளம் விலாசம் இடப்பட்ட டயறி தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் 639/4, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [19985]

### தேவை

வைத்தியசாலையில் உதவியாளராகக் கடமையாற்றுவதற்கு பெண் தேவை. வயது 30-45 கடித மூலம் [அல்லது நேரில். மெடிக்கல் கிளினிக் ஸ்ரேசன் றோட், சுன்னாகம் தொடர்பு கொள்ளவும். முடிவு திகதி 21-03-1992. [19986]

### அச்சுக் கோர்ப்பாளர்கள் தேவை

பிரபல அச்சுக்கூடமொன்றுக்கு அச்சுக்கோர்ப்பாளர்கள் தேவை. பயிற்சியாளருக்கு முன்னுரிமை உண்டு. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். 10-3-92க்கு முன் விண்ணப்பிக்கவும். இல. 833, மே,பா உதயன், யாழ்ப்பாணம். [சி/1648]

### காசாளர் தேவை

புகைப்பட நிலையத்தில் கடமையாற்றுவதற்கு பெண் காசாளர் தேவை. முன் அனுபவமுள்ளவரும், பண்டத்தரிப்பு பட்டணசபை எல்லைக்குள் வசிப்பவரும் விரும்பத்தக்கது. கல்வித் தகைமை மற்றும் முழு விவரங்களுடன் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். இல. 388, C/o உதயன். [19966]

### மணமகள் தேவை

யாழ். இந்து. மணமுறிவுடன் கொழும்பில் வாழும், 40 வயது பட்டதாரிக்கு பங்குனியிலேயே நிச்சயித்து வெளிநாடு செல்ல விரும்பும், கல்வியும், அழகுமுள்ள மணமகள் சுயமாக, 11-3-92 க்கு முன்னர் கிடைக்க விண்ணப்பிக்கவும். சீதனம் [தாரமிழந்தவர்களுக்கும்] தடையில்லை. இல. 834, மே/பா உதயன். [4503]

### மணமக்கள் தேவை

யாழ்ப்பாண குற்றமற்ற 35 வயது (அனுஷம்) அரசாங்க உத்தியோகத்தருக்கும், குற்றமற்ற 38 வயது (ரோகிணி) சகோதரிக்கும் மாற்றாகவோ, தனியாகவோ பெற்றோர் மணமக்களைத் தேடுகின்றனர். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [19971]

### மணப்பெண்கள் தேவை

செவ்வாய்க் குற்றமுள்ள 33 வயது, A/L சித்தியடைந்த கடை முதலாளிக்கும், 31 வயது கூட்டுறவுச் சங்க இலிகிதருக்கும், குற்றமற்ற 32 வயது சிமெந்துக் கூட்டுறவு இலிகிதருக்கும், 29வயது கனேடிய [பிரசாவுரிமை] பெற்றவருக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [19970]

### ரைப்பிங் சேவை

தமிழ், ஆங்கில (Stencils) ரைப்பிங் வேலைகள் செய்து கொடுக்கப்படும். பியூடோ, 39/17, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 3 ஆம் ஒழுங்கை, கிளை பிரதான வீதி, சங்கானை. [சி-1629]

### இலவச திருமண சேவை

35 வயது, அரச இலிகிதராகப் பணிபுரியும், சைவ போசன பெண்ணுக்கு ஏற்ற மணமகன் தேவை. சேவையை நாடுபவர்கள் ஞாயிறு காலையில் சந்திக்கலாம். து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [5094]

### அம்பாள் திருமண சேவை

37 வயது Ph. D. Engineerக்கும், 30 வயது Ph. D. Engineerக்கும் Doctor மணப்பெண்ணும், 30 வயது Electronic Engineerக்கும் 31 வயது Accountant (சைவம்)க்கும் பட்டதாரி மணப்பெண் தேவை. விண்ணப்ப முற்பணம் ரூபா 50/-. ஞாயிற்றுக்கிழமைகளில் தொடர்பு கொள்ளவும். சின்னச்சாமிக் குருக்கள் சண்முக ஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [19977]

### வினா — விடை

உயர்தர விஞ்ஞான பாடங்களுக்கான கடந்த கால வினா — விடைகள் [Pass Papers], மாதிரி வினாத்தாள்கள் [Model Papers] விற்பனையில் உள்ளன. தொடர்பு; உயர் தராதரக்கல்வி நிலையம், '[A' Level Centre] 1 ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி. யாழ்ப்பாணம். [சி/1649]

## SHAMROCK

**கல்வி நிறுவனம்,**
**யா/சுண்டிக்குளி.**

## A/L 92

**கணக்கியல்**
**திரு. சௌந்தி**

ஆரம்பம்:

1. கம்பனி க/கு
   சனி- **07-03-1992**
   பி. ப. 2-00—3-00
   செவ். 4-00—5-00
2. பங்குடைமை-பங்காளர் சேர்தல் [நன்மதிப்பு]
   செவ். — **10-3-1992**
   பி. ப. 3-00—4-00
   ஞாயிறு
   பி. ப. 2-00—3-00

[19984]

## PROFESSIONAL COMPUTER STUDIES

1. **d BASE III Plus**
   (Special Course for Accounts Personals)
2. **Word Processing**
   (Professional Course for all Secretaries)
3. **G. W. BASIC**
   (Language Suitable for Beginners)

**FOR DETAILS CONTACT:**

R. Karthigesan,
**No. 476, Chundikuli,**
**[Near Chundikuli, Old Park Road Junction]**

[C-1650]

## ஓராண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
| --- | --- |
| 22 — 03 — 1908 | 17 — 02 — 1991 |

## அமரர் கந்தையா அழகரத்தினம்

**திதி: 07 — 03 — 1992**

எங்களுக்காக தினமும் இறைவனை வேண்டிக் கொண்டிருந்த எங்கள் அன்புத் தெய்வம், பாசம் மிகுந்த எங்கள் அருமை அப்பா, சடுதியாக எங்களை விட்டுப்பிரிந்து சென்றுவிட்டீர்கள். உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

உங்களை மறக்காமல் என்றும் உங்கள் நினைவோடிருக்கும்:

**உங்கள் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

கருவேலடி லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(19933)




**பெண்களே உங்களுக்கு,**
**பெரியார்கள் பலருடைய**

## சீரிய கருத்துக்களின் தொகுப்பு

சுக வாழ்வுக்கான அறிவுப் பிரசுரங்கள், வீட்டுத் தோட்டத்திற்கான விதைகள், அகத்திக் கன்று மற்றும் பெறுமதியான அன்பளிப்புகள் உங்களுக்குக் காத்திருக்கின்றன.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ். இந்துக் கல்லூரியில், 1992, மார்ச் 7, 8, ஆம் திகதிகளில் நடைபெறும்.

### உள்ளூர் உற்பத்திப் பொருட்காட்சி

''மில்க்வைற்'' விளம்பரக்காட்சியில் ரூபா 50க்கு மில்க்வைற் உற்பத்திகளை வாங்கி அன்பளிப்புகளைப் பெறுங்கள்.

**''மில்க்வைற்', யாழ்ப்பாணம்.**

[சி/1576]

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு: | இறப்பு: |
| --- | --- |
| 14 — 08 — 1921 | 13 — 03 — 1986 |

அமரர்
## சின்னத்தம்பி தாமோதரம்பிள்ளை

**திதி: 7—3—1992**

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

- குடும்பத்தினர்.

''சிவசுந்தரபதி'',
தாவடி வடக்கு,
கொக்குவில்.

[19974]

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு: | இறப்பு: |
| --- | --- |
| 08 — 02 — 1969 | 07 — 03 — 1987 |

## நா. தருமராஜா (தவா)

எமது குடும்பத்தில் எல்லோரின் மேல் அன்பாக இருந்து திடீரென மறைந்தாய்! உன் நினைவு என்றும் எங்கள் மனதை விட்டு அகலாது.

உமது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அண்ணன்மார்கள்,
அக்காமார்கள், தம்பிமார்கள்,
அண்ணி, பெறாமகள், நண்பர்கள்.

சா. நாராயணசாமி,
132, கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம்.

(4506)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதஸ்வர மேதைகளான இரு முதுபெருங் கலைஞர்கள்

மாவிட்டபுரம் எஸ். கே. இராசா, யாழ்ப்பாணம் பி.எஸ். ஆறுமுகம்பிள்ளை ஆகியோரின்

★ பாராட்டு விழா சிறப்பிதழ் ★

# இன்னிசைக்கு இணையற்ற ஓர் இராசா

# அழகியலுக்கு ஓர் ஆறுமுகம்பிள்ளை



மாவிட்டபுரம் எஸ். கே. இராசா

இன்னிசை எனப்படும் [Melodical] இசை முறையின் வரைவிலக்கணத்துள் அடங்குவது கர்நாடக சாஸ்திரீய இசை. திராவிட மக்களின் பண்பாட்டின் சிறப்பை எடுத்தியம்பும் முக்கிய கலை வடிவம் இது.

இந்த இன்னிசையைப் பேணி வளர்த்துப் பாமர மக்களும் சுவைக்கும் வண்ணம் கையாண்டு வருபவர்கள் நாதஸ்வர, தவிற் கலைஞர்கள்.

'ஈழத்துத் தமிழர்களிடையே தனித்துவமான கலைகளுமில்லை; தனித்துவமான கலைஞர்களுமில்லை'; என ஒரு கால கட்டத்தில், பதவியிலிருந்த அரசாங்கத்திடமிருந்து நன்மை பெறுவதற்காக எழுதியும், பேசியும் வந்த அறிஞர்களும் உளர்.

அவர்களில் ஒரு சிலர் இப்போது எமது கலைஞர்களின் விழாக்களுக்குத் தலைமை வகிக்கவும், சிறப்பு விருந்தினர்களாகவும் அழைக்கப்படும் இக் காலகட்டத்தில், ஈழத்தமிழரிடையே வாழ்ந்து வரும் இரு தனித்துவமான கலைஞர்களுக்குப் பாராட்டு விழா நடைபெறுவது அதிமுக்கியமான ஒரு நிகழ்ச்சியாகும்.

### மாமனிதர் இராசா

பாராட்டுப் பெறும் முதுபெருங் கலைஞர்கள் இருவரில் மூத்தவரான இராசா அவர்கள் தனது இருபதாவது வயதில் நாதஸ்வர இசையை அரங்கேற்றிய குறுகிய காலத்தில் மாவிட்டபுரம் இராசா என எல்லோரும் அழைக்கும் வகையில் இசையுலகில் அரசோச்சியவர்.

எந்த வாத்தியத்தை வாசிக்கும் கலைஞனும் வாயினாற் பாடும் ஆற்றலைப் பெற்றிருந்தாலே அவனது வாத்திய இசை பரிமளிக்கும் என்பது இராசா அவர்களின் ஆணித்தரமான அபிப்பிராயமாகும்.

தமிழரசர்களின் காலத்தில் மாவிட்டபுரத்தில் வாழ்ந்து வந்த இசை வேளாளர் பரம்பரையில் வந்த இராசா அவர்கள், கர்நாடக சாஸ்திரீய இசையின் சம்பிரதாயம், மரபு ஆகியவற்றைப் பேணி வந்த கலைஞர்களுள் மிக முக்கியமான ஒருவராவர்.

இவருக்கு முன் ஈழத்தில் நாதஸ்வர இசையில் அரசோச்சிய அண்ணாச்சாமி. நவாலியூர் கோவிந்தசாமி போன்ற மேதைகளின் வழி நின்று இசை வளர்த்து வந்தவர். குழைவும் மென்மையும் இவரது வாசிப்பின் முக்கிய அம்சங்களும் சில.

இராகத்தில் வரும் ஜீவஸ்வரங்களுக்கு அழுத்தம் கொடுப்பதோடு, ஒவ்வொரு சங்கதிக்கும் கார்வை கொடுத்து வாசிக்க வேண்டுமென்பது தனது குருமாரான நாதஸ்வர வித்துவான்கள் துரைச்சாமி [இவரது தமையனார்], அமிர்தலிங்கம், சிதம்பரம் கோவிந்தசாமி ஆகியோரது அறிவுறுத்தலின் பேறாகத்தாம் கடைப்பிடித்து வந்த ஒரு முக்கிய அம்சமெனத் திரு இராசா கூறுவார்.

இவரது தாயாரான சுப்புக்குட்டி அவர்கள் அந்நாட்களில் மிகச் சிறந்த பாடகியாக விளங்கியவர். இதனால் இவரது பெயர் சு. கந்தசாமி இராசா என வழங்கலாயிற்று. இவரது மூத்த தமையனார் அக்காலத்தில் புகழ் பெற்று விளங்கிய குழந்தை வேலு நாயனக்காரராவார்.

### வல்லிபுரக் கோவிலில்

பல ஆண்டுகளாக அவரது நாதஸ்வர இசையைக் கேட்டுச் சுவைத்திருந்தாலும் பத்து ஆண்டுகளுக்கு முன் முதிர்ந்த வயதிலும் வல்லிபுரக் கோவிலில், மாவிட்டபுரம் உருத்திராபதி அவர்களுடனும், இணுவில் என். ஆர். கோவிந்தசாமி அவர்களுடனும் சேர்ந்து அவர் வாசித்த சண்முகப்பிரியா இராகமும் பல்லவியும் அவரது ஆழ்ந்த அனுபவத்தின் முத்திரைகளாக என்மனதில் பதிந்து விட்டன. நாதஸ்வரத்துக்கு அவர் ஒரு 'இராசா' தான்.

ஏறத்தாழப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் நான் அவரைச் சந்தித்த பொழுது 'ஸ்வரராக' என்று தொடங்கும் தியாகராஜஸ்வாமிகளின் சங்கராபரண இராகக் கிருதியை எவ்வாறு இனிமை சொட்டப் பாடிக் காட்டினாரோ, அவ்வாறே ஆறு மாதங்களுக்கு முன் சில இராகங்களையும் பல்லவிகளையும் பாடிக் காட்டியபோது அதிலிருந்த சுருதிப்பிடிப்பு, லயப்பிடிப்பு இனிமை ஆகியன என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தின. ஓர் இளம் பாடகருக்குரிய விறுவிறுப்பு அதில் இருந்தது.

மாவிட்டபுரம் எம். எஸ். சண்முகநாதன், காரைநகர் கணேசன், இணுவில் கே. ஆர். சுந்தரமூர்த்தி. கோண்டாவில் வி.கே.கானமூர்த்தி, அளவெட்டி எஸ். எஸ் சிதம்பரநாதன், அளவெட்டி ஆர். கேதீஸ்வரன் என வரிசையில் நிற்கும் இன்றைய நாதஸ்வர வித்துவான்களும், கோண்டாவில் இராசப்பா, நாகராசா, தாவடி கந்தசாமி போன்ற அன்றைய வித்துவான்களும் இவரது சிஷ்யர்களாவர். (சில இளங் கலைஞர்களின் பெயர்கள் தெரியவில்லை)

ஓரிரு தடவைகள் தானாகவே என்னைத் தேடி வந்து, எனது இசை விமர்சனங்கள்,

நவாலியூர்
நா. சச்சிதானந்தன்

கட்டுரைகளைப் பற்றிய தனது அபிப்பிராயங்களைக் கூறி உற்சாக மூட்டிய இராசா அவர்கள் ஒரு மாமனிதர்.

### கலை மாமேதை ஆறுமுகம்பிள்ளை

சமாதியடைந்த நல்லை ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் நான் சிறுவனாக இருந்த காலத்தில் 'மணி ஐயர்' என்ற பெயரில் கதாப் பிரசங்கங்கள் செய்யும் பொழுது அவருக்குக் கடம் வாசித்த ஒருவரை நான் அவதானிக்கத் தவறியதில்லை



யாழ்ப்பாணம் பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை

குட்டையான உருவம்; அதற்கேற்பக் கட்டையாக வெட்டிய தலை முடி; கடம் சொகுசாக அமர்வதற்கேற்ற வயிறு; அலட்சியம் தொனிக்கும் குறும்புப் பார்வை; மிதமிஞ்சிய சுறுசுறுப்பு. இவை அவரின் மொத்த உருவம்.

சிறிது நாட்களின் பின் அவரைப் போன்ற ஒருவா நாதஸ்வரம் வாசிப்பதை அவதானித்தேன். இருவரும் இரட்டையர்களாக இருக்தேன்.

அவரது நாதஸ்வர இசையும் மிகவும் கவர்ச்சியாக இருந்தது. கடமும், நாதஸ்வரமும் மட்டுமன்றி வயலின், புல்லாங்குழல், மிருதங்கம், கஞ்சிரா, தவில் என்று சுருதி வாத்தியம், தாளவாத்தியம் என்ற பாகுபாடில்லாமலும் காற்று வாத்தியம், நரம்பு வாத்தியம், தோல் வாத்தியம் என்ற வித்தியாசமில்லாமலும் எல்லாவற்றையும் வாசிக்கும்

குமோ என்ற எண்ணத்தில் சில பெரியவர்களிடம் கேட்டேன். அவரே இவர்; இவரே அவர் என்று தெரிய வந்தது. அது மாத்திரமன்றி நாதஸ்வரம் தான் இப்பொழுது அவரது முக்கிய வாத்தியம் என்பதையும், ஈழத்திலே முதன் முதல் கடம் வாசித்தவரும் அவரே என்னும் தகவலையும் அறிந்தேன். திறமைபெற்ற ஓர் அபூர்வ கலைஞர் இவர் என்பது தெரியவந்தது.

Aesthetics என அழைக்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இன்றைய பாராட்டுவிழா நிகழ்ச்சிகள்

இடம்: இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயக் கல்யாண மண்டபம்.

காலம்: பிற்பகல் 4-00 மணி.

மங்கள விளக்கேற்றல்: இசைக் கலைஞர்கள்.

மங்கள இசை: இணுவில் கே. ஆர். சுந்தரமூர்த்தி குழுவினர்.

இறைவணக்கம்: சங்கீத பூஷணம் செல்வி நாகம்மா கதிர்காமர்.

தலைமையுரை: சங்கீத பூஷணம் பொன். சுந்தரலிங்கம்.

ஆசியுரை; நல்லை ஞான சம்பந்தர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்.

மாவை ஆதீனகர்த்தா மகாராஜ ஸ்ரீ து. சண்முகநாதக் குருக்கள்.

கீரிமலை நகுலேஸ்வர ஆதீனகர்த்தா சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள்.

சிவஸ்ரீ த. மகாதேவக் குருக்கள்.

இயலிசை வாரிதி பிரம்ம ஸ்ரீ நா. வீரமணிஐயர்.

சிறப்புரை: சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்.

திரு. இரா. சுந்தரலிங்கம் [வடமாநிலக் கல்விப் பணிப்பாளர்]

### விழா நாயகர்களை கௌரவித்தல்

பாராட்டுரை: நவாலியூர் நா. சச்சிதானந்தன்

கவிஞர் புதுவை இரத்தினதுரை [விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்]

கலாசூரி நா. க. பத்மநாதன்.

இ. ஜெயராஜ் [அமைப்பாளர், அகில இலங்கைக் கம்பன் கழகம்]

நன்றியுரை: நாதஸ்வர வித்துவான் வி. கே. பஞ்சமூர்த்தி.

முதுபெரும் நாதஸ்வர மேதைகள் மாவிட்டபுரம் எஸ். கே. இராசா அவர்களுக்கும் யாழ்ப்பாணம் பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை அவர்களுக்கும்

★ நல்வாழ்த்துக்கள் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட இலங்கைச் சங்கீத சபை - யாழ். அண்ணாமலை இசைத் தமிழ் மன்றம்

யா/ வேம்படி மகளிர் கல்லூரி

## அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் - 1992

எதிர்வரும் மார்ச் 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9-30 மணியளவில் மேற்படி வருடாந்தப் பொதுக்கூட்டம் 'மேபல் தம்பையா மண்டபத்தில்' நடைபெற உள்ளது. பெற்றோர், ஆசிரியர், பழைய மாணவர், நலன் விரும்பிகள் அனைவரும் தவறாது சமுகம் அளிக்கவும்.

தலைவர்:
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

வேம்படி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

[சி-1583]



## பொருளியல் மாதிரிப் பரீட்சை

க பொ த. உயர்தரம் 1991 Aug.
(1992 விசேட பரீட்சை)

10-03-92 12 - 3 மணி பகுதி I
12-03-92 12 - 3 மணி பகுதி II

ஆசிரியர்: க. கலாகரன்

எமது நிறுவனத்தில் கற்கும், கற்காத மாணவர்களும் கலந்து கொள்ளலாம்.

★ அனுமதிக்கான சுட்டெண்களை நிறுவனத்தில் 1992 - 03 - 08 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளவும்

பரீட்சைப் பகுதி,

**விக்னா** கல்வி நிறுவனம்
யாழ்ப்பாணம்.

பின்வரும் நிறுவனங்களிலும் பரீட்சை இடம்பெறும்.

1. சிவாகி கல்வி நிறுவனம் — சாவகச்சேரி
2. நாமலர் கல்வி நிலையம் — சித்தன்கேணி
3. தான்சன் கல்வி நிலையம் — மல்லாகம்
4. யூனிவேர்சல் — கந்தர்மடம்

[சி-644]


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



உதயத்தில்:
8-11-1959
இதயத்தில்:
7-2-1992

அமரத்துவம் பெற்ற
செல்வி

### குமாரசாமி கலைவாணி

நினைந்து, நினைந்து நெஞ்சம் உருகுதே, நீ இங்கு இல்லாது துன்பம் பெருகுதே. உன் சேவை எம்மனதை விட்டுப் பிரியாது!

நாளை (8-3-92) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

உமது பிரிவால் துயருறும்;
தந்தை, தாய், சகோதர, சகோதரிகள்,
உற்றார், உறவினர்கள்,

தாழையம்பதி வீதி,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

(19967)

## இன்னிசை....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்படும் அழகியற் கலையின் முழு வடிவமான இந்த மாமேதை தான் பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை அவர்கள்.

ஆறுமுகம்பிள்ளையிடம் வேறு எவரிடமுமில்லாத அபார கற்பனா சக்தி உண்டு. இதனால் அவரது இசையில் ஒரு தனித்துவம் உண்டு. வேதாரண்ணியம் வேதமூர்த்தி அவர்களின் பாணி இவரது இசையில் தொனிக்கிறது. அவரது நாதஸ்வர இசைவாயினாற் பாடுவது போன்று அமைவதற்குக் காரணம். இசை உலகில் ஒரு தனியிடம் வகித்து ஈழத்துக்குப் பெருமை தேடித் தந்த இசைப்புலவர் ந. சண்முகரத்தினம் அவர்களின் பாணியைப் பின்பற்றி அவர் வாசிப்பதனாலேயே.

இசைப்புலவர் சண்முகரத்தினத்தின் இசையினாற் கவரப்பட்டு அவரது இசையிலுள்ள நுணுக்கங்களை அறிவதற்காகவே அவருடைய இசைநிகழ்ச்சிகளுக்குத் தான் கடம் வாசிக்கச் சென்றதாக ஆறுமுகம்பிள்ளை அவர்கள் கூறுவார்கள். வயலின், மிருதங்கம் ஆகிய பின்னணிகளுடன் ஆறுமுகம்பிள்ளை அவர்கள் நாதஸ்வரம் வாசித்தால் அதன் இனிமையே தனித்துவமானது. அதனிடையே எத்தனை எத்தனை கற்பனை வடிவங்கள். இவை சொல்லிலடங்கா.

### நவாலியூரில் ஆனந்த பைரவி

1983 ஆம் ஆண்டு நவாலியூர் நாகதம்பிரான் கோவிலில் இடம்பெற்ற சங்காபிஷேகத்துக்கு ஆறுமுகம்பிள்ளை அவர்கள் ஊஞ்சற்பா வாசித்தார்கள். பாடியவர் ஒரே வடித்திலேயே எல்லாப் பாடல்களையும் பாடினாலும், ஒவ்வொரு பாடலையும் தான் வாசிக்கும் பொழுது அந்த ஒரே இராகத்தை ஒவ்வொரு புது வடிவமாக வாசித்து இப்படியும் ஒரு கற்பனையா என எல்லோரையும் வியக்க வைத்ததோடு மெய்சிலிர்க்கவும் வைத்தவர் ஆறுமுகம் பிள்ளையவர்கள். ஆனந்த பைரவி இராகத்துக்கு இத்தனை அகன்ற பரிமாணம் உண்டா என்று இசை அறிஞர்களே வியந்தனர்.

ஆறுமுகம்பிள்ளை அவர்கள் ஏறத்தாழப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் நாதஸ்வர வித்துவான் பஞ்சமூர்த்தி அவர்களின் புது மனை புகுவிழாவில் வாசித்த இசை, கர்நாடக இசை இந்த உலகில் வாழும் வரை எவராலும் மறக்க முடியாத ஒன்றாகும் அந்த இசை நிகழ்ச்சியின் ஒலிப்பதிவை வருங்கால சமுதாயத்துக்குப் பாதுகாத்து அளிக்க வேண்டியது பஞ்சமூர்த்தி அவர்களது பொறுப்பாகும்.

ஆறுமுகம்பிள்ளை அவர்கள் அதிக சிஷ்யர்களை உருவாக்காவிட்டாலும் கூட நாதஸ்வரப் பாடசாலையில் அவரிடம் பயின்ற அத்தனை இளைஞர்களும் அவரது இசை ஞானத்தில் ஒரு சிறு பகுதியையாவது கிரகித்துள்ளார்கள் என்பது பல இளைஞர்களிடம் நான் உரையாடியதிலிருந்து தெரிய வந்தது.

அவரது சிஷ்யர்களுள் ஒருவர் நாதஸ்வர வித்துவான் ரி. எஸ். பிச்சையப்பா அவர்கள் என்பதும் குறிப்பிடத் தக்கது.

நாதஸ்வர கலாநிதி, கலாசூரி என். கே. பத்மநாதன் அவர்களிடம் உரையாடிய போது தனக்கு லயம் என்ற பொருளை முற்று முழுதாக உணர்த்தி வைத்தவர் ஆறுமுகம்பிள்ளை அவர்களே என்று கூறினார் என்றால், இதற்கு மேல் ஆறுமுகம்பிள்ளை அவர்களைப் பற்றி நாம் கூற என்ன இருக்கிறது?

★


"Practice Makes one Perfect"

ஆண்டு - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 1991
இப்பரீட்சைக்கான

## பயிற்சிப் பரீட்சைகள்

★ 08 - 03 - 92 ★ 15 - 03 - 92
★ 22 - 03 - 92 ★ 29 - 03 - 92
★ 05 - 04 - 92 ★ 12 - 04 - 92

ஆகிய ஞாயிற்றுக்கிழமைகளில் பி. ப. 1-00 மணிக்கு இந்நிறுவனங்களில் எம்மால் நடத்தப்படும்

| | |
|---|---|
| BOND INSTITUTES | — யாழ்ப்பாணம் |
| EXPRESS INSTITUTE | — இருபாலை |
| KUGAN INSTITUTE | — ஆவரங்கால் |
| SATHA PONS | — அல்வாய் |
| BRILLIANT | — சங்கத்தானை |
| VINYLS | — சுன்னாகம் |
| BITSMANS INSTITUTE | — மானிப்பாய் |
| PAARATHY | — சித்தன்கேணி |

மேலதிக விவரங்களுக்கு:

**BOND INSTITUTES**
58A, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(4511)



ஸ்கந்தா விளையாட்டுக் கழகம், சுன்னாகம்

## உதைபந்தாட்ட இறுதிப் போட்டி

காலம்: 07 - 03 - 1992
சனிக்கிழமை மாலை 2-00 மணி

இடம்: சிங்க மாப்பாணர் மைதானம், சுன்னாகம்

★ திருமலை நட்சத்திரம் நீலம் எதிர் யங்றோயல்

★ சென். மேரிஸ் எதிர் றோயல்

நின்று பார்ப்பதற்கு 5/- ஆசனம் 15/-

எல்லோரையும் அன்புடன் வருக! வருக! வருக! என அழைக்கின்றோம்.

குறிப்பு: 23-02-1992 இல் அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டு இழுப்பு 16-04-1992க்கு பின்போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

[4509]


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்

### வாமதேவன் மகாதேவன்

எம்முடன்: 14-11-1970
ஆண்டவனுடன்: 17-02-1991

திதி: 7 3-1992

எங்கள் வாழ்க்கைக்கு ஒளி ஏற்ற வந்தவனே! ஒளி ஏற்று முன்பே சோதிக்குள் விரைவில் புகுந்ததேன். விடை காணமுடியாமல் தவிக்கின்றோம். எம் அன்புச் செல்வமே! நீ மீண்டும் எம்முடன் சேர்ந்து வாழ வருவாய் என்று எண்ணியே வாழ்கின்றோம்.

''உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு''

பெற்றோர், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.

அல்லைப்பிட்டி.

[19987]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### சவாலைச் சமாளிக்க....

வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில், வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்கள் மேற்கொண்டு வரும் அபிவிருத்தி வேலைகள் தடைப்படும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. அரச சார்பற்ற நிறுவனங்களின் வெளிநாட்டுத் தலைமையகங்களில் இருந்து பிரதிநிதிகள் இங்கு வந்து, கிளைகளின் செயற்பாடுகளை நேரில் பார்ப்பதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு – கிழக்கில் யுத்தம் என்ற பெயரில் தமிழ் மக்களின் வாழ்க்கை வசதிகள் பறிக்கப்பட்டுள்ளன. உணவு, உடை, குடியிருப்பு மருந்து போன்ற முதன்மை அடிப்படை வசதிகள் கூட தடுக்கப்பட்டுள்ளன. இத்தகைய சூழ்நிலையில் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களே, தமிழ் மக்கள் ஓரளவுக்கேனும் 'வாழ்வதற்கு' உதவி வருகின்றன எனலாம்.

ஸ்ரீலங்கா அரசு தனது இராணுவ நடவடிக்கைகள் மூலம் நிர்க்கதிக்கு ஆளாக்கும் மக்களுக்கு கை கொடுத்து உதவும் பணியைத் தொண்டர் நிறுவனங்கள் மிகவும் உணர்வு பூர்வமாக ஆற்றி வருகின்றன. அகதிகளுக்கும் இடம் பெயர்ந்தோருக்கும் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்து வருகின்றன.

தமிழ் மக்களைப் பலவீனப்படுத்துவதற்கும், அதன்மூலம் அவர்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்குவதற்கும் அரசு திட்டம் போட்டுச் செயலாற்றி வருகிறது. இராணுவ நடவடிக்கை, பொருளாதாரத் தடை, உளவியல் போர், பிரசாரப் போர் ஆகியன அந்தப் பெருந்திட்டத்தின் ஒவ்வொரு கட்டங்களே!

இத்தனை உத்திகளையும் கையாண்டு தமிழர்களைப் பலவீனப்படுத்துவதற்குத்தான் முயலும்போது, தொண்டர் நிறுவனங்கள் தமிழர்களுக்குப் பலமளிப்பதை, பக்கத் துணையாக நின்று வாழ்வளிக்க முயல்வதை அரசு வெறுக்கவே செய்யும். அந்த உதவிகளைத் தடுக்கவே இயன்றவரை பாடுபடும்.

மனிதாபிமானம் அணுவளவும் இல்லாமல், ஆதிக்க வெறி பிடித்தவர்கள் இது போன்ற சூழ்ச்சிகளில் ஈடுபடுவார்கள் என்பது எதிர்பார்க்கப்பட வேண்டிய ஒன்றே.

இந்தச் சூழ்ச்சியை உண்மையில். தொண்டர் நிறுவனங்களுக்கு விடப்பட்ட சவாலாகவே கருதவேண்டும்.

இத்தனை காலமும் தொண்டர் நிறுவனங்களின் பணிகளை வரவேற்று அவற்றிடம் கறக்க வேண்டியவற்றை எல்லாம் கறந்துவிட்டு —

வடக்கு — கிழக்கு யுத்தம் நடைபெறும்போது அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்து ஆணைக்குழு நியமித்து விசாரிப்பது எதற்காக? அதன் நோக்கம் என்ன?

ஏதோ ஒரு காரணத்தைக் காட்டி தமிழர்களுக்கு அவை மனிதாபிமான ரீதியில் செய்யும் உதவிகளைத் தடுத்துவிட வேண்டும் என்பதேயாகும்.

இந்த நோக்கத்தின் முதற்படியே வடபகுதிக்கு தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள் வருவதற்கு விதிக்கப்பட்ட தடையாகும். முதற் சவாலாகும்:

வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்கள் மனம் வைத்தால் இந்தச் சவாலைச் சமாளிப்பது கடினமல்ல. தமது அரசாங்கங்களுக்கு நிலைமையை விளக்கி, ஸ்ரீலங்காவுக்கு வழங்கும் நிதி உதவிகளை நிறுத்துமாறு நிர்ப்பந்தித்தால், ஸ்ரீலங்கா அரசு வழிக்கு வராமல் இருக்க முடியுமா?

## இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 7

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் கலை, இலக்கியத் துறை சார்ந்த கருத்தரங்குகள் இன்று சனிக்கிழமை வடமராட்சியிலும், தென்மராட்சியிலும் இடம் பெற உள்ளன.

### வடமராட்சியில்

பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் பிற்பகல் 4 மணிக்கு ''பேணப்பட வேண்டிய தமிழர்களின் பண்பாட்டுக் கோலங்கள்'' என்ற பொருளில் திரு. நவரத்தினம் (நவம்) கருத்துரையாற்றுவார்.

### தென்மராட்சியில்

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் பிற்பகல் 3 மணிக்கு ''திரைப்பட ரசனை'' என்ற பொருளில் திரு. அ. யேசுராசா கருத்துரையாற்றுவார். [இ]

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ். ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை, அச்சக அதிபர் அமரர் ஆறுமுகம் சுப்பிரமணியத்தின் அந்தியேட்டி வைபவத்தை முன்னிட்டு அவரது சேவைகளை நினைவு கூருமுகமாக இன்று சனிக்கிழமை மூன்று அஞ்சலி நூல்கள் வெளியிடப்பட உள்ளன. [இ]

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 7

வண்ணார்பண்ணை நாவலர் மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெற இருக்கின்றது. [ஒ[

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ். கோட்ட மனைப் பொருளியல் ஆசிரியர்களுக்கான சேவைக் காலப் பயிற்சிக் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலையில் நடைபெறவிருக்கிறது. [உ-3]

## கண்காட்சி

யாழ்ப்பாணம், மார்ச் 7

மகளிர் அபிவிருத்தி நிலையம், சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு ஒழுங்கு செய்துள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள்களின்கண்காட்சியும், விற்பனையும் இன்றும், நாளையும் காலை9மணி முதல் மாலை 7 மணி வரை யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும். [த]

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 7

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் ஞாயிறு தோறும் இடம் பெறும் வாராந்த கருத்தரங்கு நாளை ஞாயிறு காலை 10-00 மணிக்கு கோண்டாவிலில் உள்ள கலை, பண்பாட்டுக் கழகத் தலைமைச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இந்த வார அமர்வில் திரு. டானியல் அன்ரனி ''எனது கலை, இலக்கிய அனுபவங்கள்'' என்ற பொருளில் கருத்துரையாற்றுவார். [இ]

## கிராம அதிகாரிகள் நியமனம்

வடக்கு– கிழக்கு மாகாணத்தில் 63 கிராம அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளனர்.

மாவட்ட ரீதியாக நியமிக்கப்படவுள்ள கிராம அதிகாரிகளின் எண்ணிக்கை வருமாறு:-

அம்பாறை—11, யாழ்ப்பாணம்—14, மட்டக்களப்பு—10, திருமலை—10, மன்னார்—5, கிளிநொச்சி—4, முல்லைத்தீவு—5, வவுனியா—4.

இப்பதவிகளை நிரப்புவதற்கு தற்போது விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

## மகளிர் தின நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 7

சர்வதேச மகளிர் தினம் நாளையாகும். அதனையொட்டி குடாநாட்டில் பல இடங்களிலும்பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. சில நிகழ்ச்சிகள் வருமாறு:-

★ விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் தீவகப் பிரிவினர் நடத்தவுள்ள நிகழ்ச்சிகள் நாளை இரவு 8 மணிக்கு நாவற்குழி சின்ன அருள் சனசமூக நிலையத்துக்கு அருகில் நடைபெறும்.

★ இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளைத் தலைமையகத்தில் மகளிர்தின நிகழ்ச்சிகள் நாளை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

★ திருநெல்வேலி கிழக்கு வாகையம்மன் சனசமூக நிலையத்தின் மாதர் சங்கத்தினர் ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சிகள் நாளை மாலை 3 மணிக்கு யாழ் செங்குந்த இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

★ விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினரின் கிராமப் பொருளாதார எழுச்சித் திட்டக் குழுவினர் ஒழுங்கு செய்துள்ள நிகழ்ச்சிகள் நாளை அரியாலை நெடுங்குளம் சந்தியில் அமைந்துள்ள திறந்த வெளி அரங்கில் இடம்பெறவுள்ளன.

★ யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் மகளிர் குழு நடத்தும் நிகழ்ச்சிகள் நாளை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

★ விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் வலிகாமம் பிரிவினர் ஏற்பாடு செய்துள்ள பொதுக் கூட்டமும், கலை நிகழ்ச்சிகளும் நாளை இரவு 7 மணிக்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். [ஒ-5-131-143]

## ஈழ அகதிகளுக்கு ரூ 39 கோடி செலவு

சென்னை, மார்ச் 7

தமிழகத்தில் தங்கியிருக்கும் ஈழத் தமிழ் அகதிகளின் நிவாரண உதவிகளுக்காக இந்திய அரசு கடந்த மூன்று ஆண்டுகளில் 39 கோடி ரூபா பணத்தைச் செலவிட்டிருக்கின்றது

இந்திய உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவான் வியாழன் இந்திய லோகசபையில் இதனைத் தெரிவித்தார். [ஒ-எ]

## இன்றைய ஆட்டங்கள்

சிட்னி, மார்ச் 7

உலக கிண்ணக் கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று [சனிக்கிழமை] நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு;-

★ நியூஸிலாந்து ஹமில்டன் நகரில் இந்தியா எதிர் ஸிம்பாப்வே.

★ ஆஸ்திரேலியாவின் அடிலயிட் நகரில் இலங்கை எதிர் ஆஸ்திரேலியா. [உ-எ]

## இராணுவத்துக்கு துணையாக

## வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு 16 ஆயிரம் பொலீஸார்!

வடக்கு-கிழக்கில் இராணுவத்துக்குத் துணையாகவும், இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவும், 16 ஆயிரம் பொலீஸார் அனுப்பப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கெரில்லாத் தாக்குதல்களில் இருந்து தம்மைக் காப்பாற்றிக்கொள்ள இவர்களுக்கு விசேட இராணுவப் பயிற்சி அளிக்கப்படவிருக்கின்றது என்றும் கூறப்பட்டது. [ஒ-எ]

## 8 ஆயிரம் ஈழ அகதிகள் வவுனியா வரவுள்ளனர்

கொழும்பு, மார்ச் 7

இந்தியாவில் இருந்து திருகோணமலை ஊடாக வடபகுதியைச் சேர்ந்த சுமார் 8 ஆயிரம் அகதிகள் வவுனியா வர இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களை வவுனியாவில் தங்கவைப்பதற்கு அங்கு நலன்புரி நிலையங்கள் ஒழுங்குசெய்யப்படுகின்றன —

வடபகுதியில் உள்ள அவர்களின் சொந்த ஊர்களுக்குச் செல்ல முன்னர் இந்த நலன்புரி நிலையங்களில் அவர்கள் முதலில் தங்கவைக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [ஒ-எ]

## இ. காங்கிரஸ்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

வாக்களிக்கப்போவதாக இக்கட்சிகள் அறிவித்துள்ளன.

பாரதீய ஜனதாக் கட்சி கொண்டு வந்துள்ள திருத்தப் பிரேரணைகளை ஆதரித்து வாக்களிக்கப் போவதையே தேசிய முன்னணியினதும் இடதுசாரிக் கட்சிகளினதும் இந்த அறிவிப்பு எடுத்துக் காட்டுவதாக புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் கூறின.

பாரதீய ஜனதாக் கட்சியுடன் சேர்ந்து இக்கட்சிகள் வாக்களித்தால், அது நரசிம்மராவின் சிறுபான்மை அரசை கவிழ்ப்பதற்கு போதுமானதாக இருக்கும் என்று அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதற்கிடையில்—

இத்தகைய நெருக்கடி நிலை தோன்றியிருப்பதால், அரசாங்கம் நாடாளுமன்றில் தனக்குள்ள பெரும்பான்மையை திங்களன்று சபையில் நிரூபிக்கவேண்டும் என்று பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் எல். கே. அத்வானி கோரியுள்ளார்.

## நாடாளுமன்றில் கட்சி நிலைவரம்

| | | |
|---|---|---|
| ★ தேசிய முன்னணி மற்றும் இடதுசாரிக் கட்சிகள் | | — 134 |
| ★ பாரதீய ஜனதா | — 119 | |
| சிவசேனா | — 02 | — 121 |
| ★ காங்கிரஸ் | — 242 | |
| அ. தி. மு. க | — 11 | |
| முஸ்லிம் லீக் | — 02 | |
| ஜனதா (குஜராத்) | — 01 | |
| கேரள காங்கிரஸ் | — 01 | |
| எஸ். எஸ். பி | — 01 | |
| நியமன எம். பிக்கள் | — 02 | |
| சிவசேனா [illegible] | — 02 | — 262 |
| ★ ஏனையவை | | — 20 |

## கிணற்றில் விழுந்து மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 7

பாடசாலைக்குச் சென்ற 8 வயதுச் சிறுவன் பாடசாலைக்கு அருகில் உள்ள வளவுக் கிணறு ஒன்றில் சடலமாகக் கிடக்கக் காணப்பட்டான் என்றுகூறப்பட்டது.

நாயன்மார்கட்டில் நேற்று நண்பகல் இச்சம்பவம் இடம் பெற்றது. அரியாலையைச் சேர்ந்த சந்திரகுமார் கபில்ராஜ் [வயது 8] என்ற 3 ஆம் ஆண்டு வகுப்பு மாணவனே உயிரிழந்தவனாவான். தண்ணீர் குடிப்பதற்காகச் சென்றபோது கிணற்றில் தவறிவிழுந்திருக்கலாம் என்று சொல்லப்பட்டது. [உ-15]

## யூனியனில் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், மார்ச் 7

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி உயர்தர மாணவர் ஒன்றியம், திட்டமிட்டபடி தேநீர் விருந்துபசாரத்தையும் ஒன்றுகூடலையும் நேற்று நண்பகல் நடத்தியது. பிரதம விருந்தினராக திரு. இ. சிவகுமாரன் கலந்துகொண்டார்.

ஒன்றுகூடல் நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டிருந்த ஏனைய கல்லூரிகளைச் சேர்ந்த உயர் வகுப்பு மாணவர் பிரதிநிதிகள் அனைவரும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர். விஷமிகள் சிலர் இந்நிகழ்ச்சி நடைபெறமாட்டாது என விளம்பரப்படுத்தியிருந்த போதிலும் வைபவம் வெகு சிறப்பாக நடந்து முடிந்தது. [அ]

## "பச்சை" குத்தினர்

சென்னை, மார்ச் 7

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் பிறந்த தினத்தை ஒட்டி, அவரது உருவப் படத்தை அ. தி. மு. க. அமைச்சர்களான அழகு திருநாவுக்கரசு, மதுசூதனன் தங்கள் கைகளில் 'பச்சை' குத்திக் கொண்டார்கள். இவர்களுடன் சத்தியமங்கலம் எம். எல். ஏ. உட்பட ஐநூறு பெண்களும் ஜெயலலிதாவின் உருவத்தை பச்சையாகக் குத்திக் கொண்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

## ஷெல் தாக்குதல்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி]

மகஜரை ஜனாதிபதிக்கு அனுப்புவதாகவும்—அரச அதிபர் தெரிவித்தார்.

தமிழர் நலன் காக்கும் பிரிவின் வலிகாமம் மேற்கு உதவி அரச அதிபர் பகுதிக் கிளையின் அனுசரணையுடன் நடந்த இந்தப் பேரணியில் அராலிப் பகுதியைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என்று பல தரப்பினரும் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதற்காக அரச அதிபரிடம் கையளிக்கப்பட்ட மகஜரில் —

எந்த விதமான ஆத்திரமூட்டல் நடவடிக்கையும் இல்லாமலே மக்கள் குடியிருப்புகள் மீது ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது [அ-12-100]

## பாடசாலை..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கள் மத்தியில் இருந்து இரகசிய வாக்கெடுப்பு மூலமே தெரிவு செய்யப்படுவார்கள்.

பாடசாலையில் பயிலும் மாணவர்களின் பெற்றோரே வாக்களிப்பில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில், இரகசிய வாக்கெடுப்பின் மூலம் அபிவிருத்திச் சபைக்கு பழைய மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

— இவ்வாறு அமைச்சர் கூறினார். [ஒ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A/L 91 - பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்கான விசேட இலவ கருத்தரங்குகள்

சனி / ஞாயிறு
2-30 — PHYSICS — திரு. ரவீந்திரநாதன் B. Sc.
4-00 — CHEMISTRY — திரு. சிவசோதி B. Sc.
செவ்வாய்
4-00 — ZOOLOGY — திரு. அல்பேரன்ஸ் B. Sc.
4-00 — APP. MATHS — திரு. அமிர்தலிங்கம் B.Sc.
வியாழன்
4-00 — BOTANY — திரு. ஸ்ரீகரன் B.Sc.
4-00 — PURE MATHS — திரு. அமிர்தலிங்கம் B. Sc

ஆரம்பம்: 07 03-1992

★ எமது நிறுவனத்தில் கற்கின்ற, கற்காத அனைத்து மாணவர்களும் இலவசமாக பங்கு பற்றலாம்.

BOND INSTITUTES,
58 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[4510]

## மரண அறிவித்தல்கள்

### சுவாம்பிள்ளை சூசைப்பிள்ளை

பெரிய விளானைச் சேர்ந்த சுவாம்பிள்ளை சூசைப்பிள்ளை நேற்று (06 03-92 இல்) காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், அன்பு, அருள், மலர், மணி, நாயகி, ஜெயம், நவம் ஆகியோரின் அருமைத் தந்தையாரும், அந்தோனிப்பிள்ளை, காலஞ்சென்ற முடியப்பு, ஜேசுதாசன், தைரியநாதர், றொபேட், அன்ரனி, யோசப் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07-03-92) மாலை 3-00 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து நல்லடக்கத்திற்காக புனித யுவானியார் ஆலய சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
சு. அந்தோனிப்பிள்ளை.
(மருமகன்)

பெரியவிளான்,
இளவாலை.

(19982)

### சோமசுந்தரம் மயில்வாகனம்

[ஓய்வு பெற்ற வன பரிபாலன அதிகாரி, A. C F.]

சோமசுந்தரம் மயில்வாகனம் 6-3-1992 இல் சிவபதமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற சோமசுந்தரம், பொன்னம்மா ஆகியோரின் மூத்த புதல்வரும், பரிபூரணத்தின் (தங்கம்) அன்புக் கணவரும், கார்த்திகேசு, சொர்ணம் தம்பதிகளின் மூத்த மருமகனும், வீரசிங்கம், பாலசிங்கம் ஆகியோரின் சகோதரனும், பரஞ்சோதி, தேவேந்திரன், யோகவதி, டாக்டர் திலகவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், குமாரசாமி, நாகேந்திரராசா, சகுந்தலாதேவி, டாக்டர் குகதாசன் ஆகியோரின் சகலனும், குமரேந்திரனின் அன்புப் பெரிஐயாவும் ஆவார்.

ஈமக்கிரியைகள் உரும்பராய் மேற்கு அம்மன் வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று காலை 10மணியளவில் நடைபெற்று பூதவுடல் வேம்பையன் மயானத்தில் தகனம் செய்யப்படும் இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
த. பாலசுப்பிரமணியம்,
[பெறாமகன் - ஆசிரியர்,
வயாவிளான் ம. ம. வி]

அம்மன் வீதி,
உரும்பராய் மேற்கு,
உரும்பராய்.

[19989]

### திரு. சரவணமுத்து செல்லத்துரை

[முன்னாள் பிரதம லிகிதர் இலங்கை மின்சாரசபை, கொழும்பு.]

மாதகலைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்டவருமான திரு. செல்லத்துரை 29-02-92 லண்டனில் காலமானார். அன்னார் திருமதி காந்திமதியின் அன்புக் கணவரும், சாந்தகுமார் [லண்டன்], சிவகுமார் [லண்டன்], சூரியகுமார் [லண்டன்] ஆகியோரின் அன்புத் தந்தையும், கந்தரட்ணம்-சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும், சரஸ்வதி, சோதிமதி, நடராசா, நாராயணபிள்ளை [சீமெந்துத் தொழிற்சாலை முன்னாள் ஊழியர், காங்கேசன்துறை ], வன்னியசிங்கம் [K. V.D. Clerk], காராளசிங்கம் [மின்சாரசபை, சுன்னாகம்.], ஜயராமன் [ஜேர்மனி] ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் லண்டனில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
க. நாராயணபிள்ளை.
[மைத்துனர்]

வேதவுடையார் வளவு,
மல்லாகம்.

[4507]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் ( பிறைவேட் ) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/4 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 7-3-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# SHAMROCK

கல்வி நிறுவனம்,
யா/சுண்டிக்குளி

## A/L 93

PURE/APP.

திரு. கமலசிங்கம்
B. Sc. (Hons) Dip. in ED.

ஆரம்பம்:
சனி 07-03-92 பி. ப. 2-00

1. காவிகள்
2. மீதித் தேற்றம்

(19983)

## Thileepan Research Fellowship For Biotechnology

Graduates/Postgraduates are requested to apply for the above fellowship giving their bio-data and research proposal in plant tissue culture and genetic engineering. The fellowship will be awarded to the most suitable applicant after an interview. A monthly allowance of Rs. 2, 500/- shall be paid.

The duration for this fellowship shall be one year and could be extended by re-applying for the fellowship. The fellowship may be terminated at any time if the product is not proceeding satisfactorily or the applicant's conduct is unsatisfactory.

The closing date for applications will be 30 - 04 - 1992.

Registrar,
University of Jaffna.

(C/1580)

## மரண அறிவித்தல்

### A. S. பொன்னுத்துரை

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், பண்டத்தரிப்பில் வசித்தவருமாகிய சிதம்பரப்பிள்ளை அல்பிரட் பொன்னுத்துரை காலமாகி விட்டார்.

இவர் ஜெயமணியின் அன்புக்கணவரும், ராசமணியின் அன்புச் சகோதரனும், தவமணி, ஜெயதேவி, ஜெயராணி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், குமாரசாமி, தேவநேசன், சீனித்தம்பி ஆகியோரின் அன்பு மாமனாரும், நாதன், ரஞ்சன், ரஜினி, ரதினி, சீலன், செறின், சைரிஸ், நிரோசா, நிசாரா ஆகியோரின் அன்பு பேரனும், தம்பையா, ரத்தினராசா, பொன்ராசா, தங்கராசா, நேசரத்தினம் ஆகியோரது அன்பு மைத்துனருமாவார்

அன்னாரது நல்லடக்க ஆராதனை சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பில் அவரது இல்லத்தில் இன்று மாலை 4 மணிக்கு நடைபெற்று பண்டத்தரிப்பு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
சீனித்தம்பி
சண்டிலிப்பாய் றோட்,
பண்டத்தரிப்பு.

[19997]

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

( 7—03 – 1992)

### அமரர் மயில்வாகனம் கதிரவேலு

(ஓய்வுபெற்ற கட்டடத் திணைக்கள உத்தியோகத்தர்-இடைக்காடு, அச்சுவேலி)

அன்புத் தெய்வமே! அருமை அப்பாவே!
தங்கள் அடிச்சுவட்டில் நானும் பிள்ளைகளும்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் பங்கு பற்றிய, பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்த, உற்றார், உறவினர், நண்பர்கள், ஆசிரியர், மாணவர்கள் அனைவருக்கும் நன்றி.

31 ஆம் நாள் கிரியைகள் 13/7, தயா வீதி, வெள்ளவத்தையில் நடைபெறும்.

மனைவி. பிள்ளைகள்.

இடைக்காடு,
அச்சுவேலி

[5100]

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 24 — 07 — 1929



மறைவு: 27 — 02 — 1990

### அமரர் நா. தம்பிமுத்து

(இளைப்பாறிய ஆசிரியர்)

திதி: 07-03-1992

அன்புடனே அருள் சொரிந்து எமை
அவனியிலே அஞ்சாமல் வாழச் செய்த
மன்னவனே, உங்கள் ஆத்ம
சாந்திக்காய் இறைவனைப் பிரார்த்திக்கும்

மனைவி, பிள்ளைகள்.

நவாலி தெற்கு,
மானிப்பாய்.

[19992]

## மரண அறிவித்தல்கள்

### ஆறுப்பிள்ளை ஜெயரத்தினசிங்கம்

வறுத்தலைவிளான் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுப்பிள்ளை ஜெயரத்தினசிங்கம் 5 ஆம் திகதி வியாழன் இரவு காலமாகிவிட்டார். இவர் காலம்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும் தவராஜசிங்கம் [மக்கள் வங்கி முகாமையாளர் வவுனியா]. சிவராஜசிங்கம் [சவுதி], மன்மதராஜசிங்கம் [கனடா], தவமணி, நீலாம்பிகாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் புவனேஸ்வரி, இராஜேஸ்வரி, தவமணிதேவி, நவரத்தினம் [தபாற் கந்தோர் யாழ்ப்பாணம்], கனகரத்தினம் [ப. நோ. கூ. சங்கம் காரைநகர்] ஆகியோரின் மாமனாரும் சுகிர்தம்மா, பவளம்மா, செல்வரத்தினம், சுபாரத்தினசிங்கம், செகரத்தினசிங்கம், காலம்சென்ற புஸ்பம்மா ஆகியோரின் சகோதரனும் நவநீதன், நவரஞ்சன், நவஜீவன், சுபாங்கி, சித்திராங்கி, கார்த்திகா, நிலானி, சாந்தினி, குயிலமுதா, மதன்குமார், கவிதா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று சனிக்கிழமை 7 ஆம் திகதி மாலை 3.00 மணியளவில் மானிப்பாயில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
நவரத்தினம்
[மருமகன்]

சந்தை ஒழுங்கை,
மானிப்பாய்.

[19993]

### வே. முருகேசு

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. வே. முருகேசு அவர்கள் 06-03-1992 இல் காலமாகி விட்டார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 07-03-1992 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு சாவகச்சேரியில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்
திருமதி சரோஜினிதேவி
கோகுலதாசன்

''பவள வாசம்''
20, ஏ, கண்டி வீதி,
(பழைய பொலீஸ் நிலையம் அருகில்)
சாவகச்சேரி.

[1996]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org